2016 பிப்ரவரி 19]

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

85—

பஞ்சாலை

***44793—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் புதிய பஞ்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற தாரக மந்திரத்தோடு ஏழையெளிய மக்களுக்காக, விவசாயப் பெருங்குடி*

மக்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றை 100 சதவிகிதம் நிறைவேற்றி, இன்றைக்கு ஏழைகளுடைய நெஞ்சங்களில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிட்டத்தட்ட 139 ஊராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளை உள்ளடக்கிய எனது மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் இதுவரை எந்தத் தொழிற்சாலையும் கிடையாது. ஏற்கெனவே ராஜகம்பீரத்தில் இயங்கி வந்த தனியார் வரதலட்சுமி ஆலையும், முத்தனேந்தலில் இயங்கி வந்த அரசு சோமசுந்தரம் பஞ்சாலையும் நிருவாகக் கோளாறுகளின் காரணமாக மூடப்பட்டு, இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. அங்கே படித்த இளைஞர்களும், இளம் பெண்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் விவசாயத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருக்கின்ற அந்தப் பகுதி ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு பஞ்சாலையை அரசு சார்பாக அமைத்துத் தந்தால் உதவியாக இருக்கும். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மானாமதுரை தொகுதியில் ஒரு பஞ்சாலையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 1958 முதல் 1985 வரையிலான காலத்தில் நிறுவப்பட்ட 15 நூற்பாலைகளில், 6 ஆலைகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சுமார் 150 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள அச்சன்குளம் பகுதியில் முழுமையாக ஆதி திராவிடர்களுக்கென்று உள்ள அந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு சுமார் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, மூடப்பட்டிருந்த ஆலை திறக்கப்பட்டு, இன்றைக்கு 200 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிற அற்புதம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் நடைபெற்றிருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் தேனி, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி,

புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 6 ஆலைகளுக்கு 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, அந்த ஆலைகள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை தனியாருக்குச் சொந்தமாக இருந்தது. சோமசுந்தரம் செட்டியார் என்பவருக்குச் சொந்தமாக இருந்ததை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் அது அரசு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையாக மாற்றப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வந்தது. பல்வேறு முயற்சிகள் எடுத்தாலும்கூட, அது இலாபத்திலே இயங்க முடியாத ஒரு நிலையில் இருந்த காரணத்தினால், அது மூடப்பட்டு, அந்த நூற்பாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிவாரணத் தொகை உரிய முறையிலே வழங்கப்பட்டுவிட்டது. இருப்பினும், 6 நபர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு அந்த வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் மீண்டும் ஆட்சியை அமைக்கவிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல விவசாயிகளும், தொழிலாளர்களும் நிறைந்த அந்தப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, எதிர்வரும் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

86—

உள்விளையாட்டு அரங்கம்

***41128—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—